**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ERANIEL**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNSS 2023, and Rule 42 and Judicial

Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 169/2012 P.W.9/L.W.11**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. ஜெயபாண்டி | **Calling** | : | |
| **Father's Name** | : | த/பெ. | **Age** | : | |
| **Village** | : | | | | |
| **Taluk** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 17.09.2025.**

**அரசு தரப்பு உதவி வழக்கறிஞர் இன்று ஆஜரில்லை என்பதால் சாட்சியை வழக்கின் தன்மைக் கருதியும் நீதியின் நலன் கருதியும் நிலையப்பொறுப்பு அதிகாரியின் முன்னிலையில் சாட்சியம் பதிவுச் செய்யப்படுகிறது.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

1. நான் தற்பொழுது காவல்துறையில் பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 11.11.2011 அன்று மணவாளக்குறிச்சி காவல்நிலையத்தில் ஆய்வாளராக இருந்தபோது உத்தரவின் பேரில் குளச்சல் காவல்நிலைய குற்ற எண் 84/2011, சட்டப்பிரிவுகள் 406, 420 இ.த.ச வழக்கினை முதல் விசாரணையை ஆய்வாளர் கந்தகுமார் செய்துவைத்திருந்தார். பின்னர் மேற்படி வழக்கு கோப்பை நான் எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன். அன்றையதினம் 10.00 மணிக்கு தகவலின் பேரில் செம்பொன்விளை சந்திப்பில் நின்றிருந்த குற்றம் சுமத்தப்பட்ட நபரான சிவராஜை விசாரணை செய்தததில் எந்தவித துன்புறுத்தலும், அச்சுறுத்தலும் இன்றி தானாக கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தைசாட்சிகள் பால்மணி, தங்கப்பன் ஆகியோர்கள் முன்னிலையில் பதிவுச் செய்தேன்.

2. மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தின் பேரில் குற்றம் சுமத்தப்பட்ட நபர் அவரது இல்லத்திலிருந்து 12.00 மணிக்கு எடுத்து ஆஜர் செய்த தங்க வளையல்கள் -11, எடை 83.100 கிராம், தங்கநெக்லஸ் -2, எடை 60.900 கிராம், தங்க மோதிரம் 16, எடை 19.100 கிராம், தங்க கம்மல் தூக்கு 1 ஜோடி எடை 5.50 கிராம், தங்க செயின் -1, எடை 7.800 கிராம், கல் நெக்லஸ் ஒன்று, எடை 15.500 கிராம். கல் பிரேஸ்லெட்-1 எடை 9.500 கிராம் ஆகியவற்றை அத்தாட்சி பிறப்பித்து மேற்படி சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றினேன். **மேற்படி படிவம் 91 அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

3. பின்னர் 12.30 மணிக்கு பாலப்பள்ளம் கே.பி.என் ஜுவல்லரியின் உரிமையாளர் ஐயப்பனிடமிருந்து தங்க கட்டிகள் -2 எடை 38.800 கிராம் தங்கத்தை அத்தாட்சி பிறப்பித்து சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றினேன். **அதற்கான படிவம் 91 அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் குற்றம் சுமத்தப்பட்ட நபரையும், சொத்துக்களையும் நிலையம் கொண்டு வந்து தக்க வழிக்காவலுடன் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். அன்றே வழக்கின் சட்டப்பிரிவுகளை 406, 420 இ.த.ச வை 381 ஆக பிரிவு மாற்றம் செய்தேன். சாட்சிகள் முத்துக்குமார், ஷீஜா ரெல்மா ஆகியோர்களிடம் மறு வாக்குமூலம் பெற்றேன். பின்னர் வழக்கு கோப்பை எனக்கு பின் வந்த ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன்.

**குறுக்கு விசாரணை** :

1. வழக்கின் விசாரணையை நான் 11.11.2011 அன்று எடுத்துக்கொண்டேன். நான் வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்டபிறகு குற்றம் சுமத்தப்பட்ட நபர்களை தவிர்த்து மற்ற நபர்கள் முறையாக வேலைக்கு வந்தார்களா என்று விசாரித்தேனா என்றால் இல்லை. மேற்படி குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஒப்புதல் வாக்குமூலத்தில் சிறிது நகைகளை கே.பி.என் நகை கடையில் விற்பனை செய்ததாக சொன்னதை பொறுத்து மேற்படி கடையில் உள்ள நபர்களை சாட்சியாக விசாரித்தேனா என்றால் இல்லை.

2. மேற்படி நகை கடையில் நகைகளை கொடுத்து வாங்கியதற்கான ஆவணங்கள் எதையும் கைப்பற்றி வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். திருட்டு சம்மந்தமான பொருட்களை பொறுத்து ஆவணங்கள் இருக்காது. திருட்டு நகையை வாங்குவது குற்றம் என்றால் சரிதான். தெரிந்து வாங்குவது தான் குற்றம். நகைகளை வாங்கும் போது அதற்கான ரசீது எதுவும் தரப்படாத நிலையில் சந்தேகத்தை ஏற்படுத்தும் என்றால் சரிதான்.

3. ஒப்புதல் வாக்குமூலமானது குற்றம் சுமத்தப்பட்ட நபரை உறுதி செய்வதற்கு முன்பே தயார் செய்யப்பட்டு அதில் குற்றம் சுமத்தப்பட்ட நபரின் மீது உண்மைக்கு மாறாக சங்கதிகள் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அ.சா3 பால்மணி அ.சா1ன் கணவரின் உறவினர் என்பதால் மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரியல்ல. மேற்படி அ.சா1 ன் கணவர், அ.சா.6 ஆக இவ்வழக்கில் விசாரிக்கப்பட்டுள்ளார் என்றால் சரிதான்.

4. நான் குற்றம் சுமத்தப்பட்ட நபரை கைது செய்த பிறகு முத்தூட் நிதி நிறுவனத்திற்குசென்று அங்குள்ள நிறுவனத்தின் உள் அமைப்பை பார்வையிட்டு அறிக்கை எதுவும் தயார்செய்தேனா என்றால் இல்லை.

5. நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் சொன்ன இடத்தில் வைத்து குற்றம் சுமத்தப்பட்ட நபரை கைது செய்யவில்லை என்றாலும், அவரிடம் ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் பெறப்படவில்லை என்றாலும், அதன் அடிப்படையில் எந்தவித தடயப்பொருட்களும் கைப்பற்றப்படவில்லை என்றாலும், வழக்கின் தடயப்பொருட்களுக்கும், வழக்கு சம்பவத்திற்கும் குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல. நான் உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை - முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.